சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை :- **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் வியாழக்கிழமை

**REA.No.04/2026**

**இன்**

**REA.No.02/2025**

**இன்**

**நிறைவேற்று மனு எண்.24/2018**

1. திருநாவுக்கரசு
2. தெய்வம்

... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**//எதிராக//**

ரீட்டா ... எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 23.02.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி/செல்வி.கே.ஏ.ரேவதி,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ராஜா,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி மனுவில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆவணங்களை சமர்ப்பிக்கவும் குறியீடு செய்யவும் இந்த வழக்கை Re-open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவி 151 ன் கீழ் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-**



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:18 +0530

(i) தான் மேற்படி வழக்கில் 1-ம் மனுதாரர் / எதிர்மனுதாரர் /பிரதிவாதி ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் விசாரணைகள் முடிக்கப்பட்டு உத்திரவுக்காக மேற்படி மனு இன்றைய தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தற்போது தங்களுக்கு சாதகமான பல ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டிய கட்டாயம் நேரிட்டுள்ளது என்றும், அவைகளை சமர்பித்து குறியீடு செய்தால் தான் தங்கள் தரப்பு பலப்படும் மேலும் நீதி நிலைநாட்டப்படும் என்றும், ஆகையால் தங்கள் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக இத்துடன் Re-Call மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தயவுசெய்து ஆவணங்கள் சமர்ப்பிக்கவும் குறியீடு செய்யவும் இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. <u>**எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சுருக்கம்**</u>: -

(i) மனுதாரர்கள் மனு பொய் மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுண்டு போக்கத்தக்கதாகும். இந்த எதிருரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர ஏனைய சங்கதிகளை இந்த மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(ii) மனுதாரர் மனு அபிடவிட் 2-ல் கூறும் காரணங்கள் பொய்யான காரணங்களாகும். மனுதாரர்கள் அவர்களுக்கு சாதகமான பல ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதும், மேற்படி நிறைவேற்று மனுவிற்கு அந்த ஆவணங்கள் சம்மந்தமில்லாத ஆவணங்கள் ஆகும். வழக்கிலும், நிறைவேற்று மனுவிலும் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் முகவரியை பற்றி எப்போதும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:20 +0530

ஆட்சேபனை தெரிவித்தது கிடையாது. மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு தீர்ப்பாணையினை பொறுத்து எவ்வித மேல்நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. இந்த எதிர்மனுதாரர்/வாதி மேற்படி நிறைவேற்று மனுவில் சட்டப்படியான பரிகாரம் பெற்றுவிட கூடாது என்பதற்காக தவறான எண்ணத்தில் இவ்வாறான மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நிறைவேற்று மனுவில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் உரிமையியல் நடமுறை சட்டத்திற்கு விரோதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் எதிர்மனுதாரர் 17 மனுதாரர்/DH-க்கு செலுத்த வேண்டிய பணத்தை ஏமாற்றவும், அவர்களை நீதிமன்றம் மூலம் சட்டப்படியான பலனும் அடைந்துவிட கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுகிறார்கள். இம்மனுவை அனுமதிப்பதால் மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எவ்வித சட்டப்படியான பலனும் ஏற்படுவதில்லை. நீதிமன்றத்தின் நேரம் மட்டுமே வீணடிக்கப்படும்.

(iii) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பதற்காகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்/மனுதாரர்/DH பெண் என்பதால் அவரை எப்படியேனும் ஏமாற்றி அக்கிரம லாபம் அடைய வேண்டும் என்பதற்காகவே சட்ட விரோதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாாரர்கள்/பிரதிவாதிகளின் இச்செயல் சட்ட நடவடிக்கைகளுக்கு விரோதமானதாகும். ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இம்மனுவை இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/DH-ன் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:23 +0530

<u>**தீர்வு**</u> : -

**5.** மேற்படி மனுவில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆவணங்களை சமர்ப்பிக்கவும் குறியீடு செய்யவும் இந்த வழக்கை Re-open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவி 151ன் கீழ் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தான் மேற்படி வழக்கில் 1-ம் மனுதாரர் / எதிர்மனுதாரர் /பிரதிவாதி ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் விசாரணைகள் முடிக்கப்பட்டு உத்திரவுக்காக மேற்படி மனு இன்றைய தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், தற்போது தங்களுக்கு சாதகமான பல ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டிய கட்டாயம் நேரிட்டுள்ளது என்றும், அவைகளை சமர்பித்து குறியீடு செய்தால் தான் தங்கள் தரப்பு பலப்படும் மேலும் நீதி நிலைநாட்டப்படும் என்றும், ஆகையால் தங்கள் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக இத்துடன் Re-Call மனு தாக்கல் செய்து உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டார் அவர்கள் தயவுசெய்து ஆவணங்கள் சமர்ப்பிக்கவும் குறியீடு செய்யவும் இந்த வழக்கை Re-Open செய்து தக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும் நியாயமும் ஆகும் என்றும், இல்லாவிட்டால் தனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பும் பெருத்த கஷ்ட நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

**7.** எதிர்மனுதாரர்/ மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர் மனு அபிடவிட் 2-ல் கூறும் காரணங்கள் பொய்யான காரணங்களாகும் என்றும், மனுதாரர்கள் அவர்களுக்கு



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.26 17:03:26 +0530

சாதகமான பல ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது என்பதும், மேற்படி நிறைவேற்று மனுவிற்கு அந்த ஆவணங்கள் சம்மந்தமில்லாத ஆவணங்கள் ஆகும் என்றும், வழக்கிலும், நிறைவேற்று மனுவிலும் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் முகவரியை பற்றி எப்போதும் ஆட்சேபனை தெரிவித்தது கிடையாது என்றும், மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு தீர்ப்பாணையினை பொறுத்து எவ்வித மேல்நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும், இந்த எதிர்மனுதாரர்/வாதி மேற்படி நிறைவேற்று மனுவில் சட்டப்படியான பரிகரம் பெற்றுவிட கூடாது என்பதற்காக தவறான எண்ணத்தில் இவ்வாறான மனுக்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நிறைவேற்று மனுவில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் உரிமையியல் நடமுறை சட்டத்திற்கு விரோதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் நடவடிக்கைகள் எதிர்மனுதாரர் 17 மனுதாரர்/DH-க்கு செலுத்த வேண்டிய பணத்தை ஏமாற்றவும், அவர்களை நீதிமன்றம் மூலம் சட்டப்படியான பலனும் அடைந்துவிட கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் செயல்படுகிறார்கள் என்றும், இம்மனுவை அனுமதிப்பதால் மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எவ்வித சட்டப்படியான பலனும் ஏற்படுவதில்லை என்றும், நீதிமன்றத்தின் நேரம் மட்டுமே வீணடிக்கப்படும் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பதற்காகவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/DH பெண் என்பதால் அவரை எப்படியேனும் ஏமாற்றி அக்கிரம லாபம் அடைய வேண்டும் என்பதற்காகவே சட்ட விரோதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாாரர்கள்/பிரதிவாதிகளின் இச்செயல் சட்ட நடவடிக்கைகளுக்கு விரோதமானதாகும் என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:29 +0530

தயவு செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இம்மனுவை இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/DH-ன் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

**8.** இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவானது உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்து மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்க Re-open செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. மனுவுடன் இணைத்துள்ள பிரமாண பத்திரத்தில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆதரவாக பல ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்றும், அவைகளை சமர்ப்பித்தால் தான் தங்களுக்கு நீதி கிடைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அது என்ன ஆவணங்கள் என்பது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. அந்தஆவணங்களை இணைத்தும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. அவ்வாறு இருக்கும்போது முக்கியமான ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்று கோருவது ஏற்புடையதாக இல்லை. அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, முழு விசாரணைக்கு பிறகு அந்த வழக்கில் மாற்று பரிகாரமாக தாவா அட்வான்ஸ் தொகை திருப்பி கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் அசல் நிறைவேற்று மனு சொத்தை ஜப்தி செய்து ஏலத்தில் விட்டு தொகையை வசூலிக்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்படவில்லை. ஆகவே நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்துவதற்காக வேண்டிதான் இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே நீதியின் நலனை கருத்தில்

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:31 +0530

கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,** மேற்படி மனுவில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆவணங்களை சமர்ப்பிக்கவும் குறியீடு செய்யவும் இந்த வழக்கை Re-open செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:35 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:37 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.